| | | |
|---|---|---|
| **O.S No.** | : | 165/2014 |
| **DATE** | : | **13.11.2025** |
| **பெயர்** | : | **காருண்யாதேவி** |
| **கணவர் பெயர்** | : | **லட்சுமி நாராயணன்** |

**வாதி தரப்பு பி.வா. சா.1 குறுக்கு விசாரணை**

**1.** நான் தாக்கல் செய்துள்ள பிரமாண வாக்குமூலத்தை படித்து பார்த்து தான் கையெழுத்து போட்டேன். தாவா சொத்து ஊத்துக்காடு கிராமம் எண் 92ல் அமைந்துள்ளது என்று குறிப்பிட்டு சொல்லியுள்ளேன். பி.வா.சா.ஆ.1 நாராயணி அம்மாள் எழுதி வாங்கிய ஆவணத்தில் 112 என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் அது பைமாஷ், அது தான் 112. அந்த ஆவணத்தில் குறிப்பிடப்பட்டுள்ள பட்டா எண் எனக்கு ஞாபகமில்லை. எனது தந்தை கிரயைம் வாங்கிய பி.வா.சா.ஆ –2 ஆவணத்தில் எண் என்ன குறிப்பிடப்பட்டுள்ளது என்று எனக்கு தெரியாது. சாட்சியிடம் மேற்படி ஆவணம் காண்பிக்கப்பட்டது, அதில் சொத்து விவரத்தில் 112, என்று குறிப்பிடப்பட்டுள்ளது, பட்டா எண் குறிப்பிடப்படவில்லை.

2. நாராயணி அம்மாள் கிரையம் பெற்ற சொத்தை பட்டா எண் 944 ஆக மாற்றி தனது அனுபவித்தில் வைத்திருந்ததாக குறிப்பிட்டு சொல்லியுள்ளேன். மேற்படி பட்டா எண் பற்றி எனது தந்தை வாங்கிய ஆவணத்தில் குறிப்பிடப்படவில்லை, நான் பிரமாண வாக்குமூலத்தில் தவறாக சாட்சியம் அளித்துள்ளேன் என்று சொன்னால் சரியல்ல. நாராயணி அம்மாள் சொத்தை வாங்கும் போதே மேற்படி சொத்திற்கு பட்டா இருந்தது அதனால் பட்டா அவர் பெயருக்கு மாற்றப்படும் போது வேறு பட்டா கொடுக்கப்பட்டிருக்கும் என்று சொன்னால் அதை பற்றி எனக்கு தெரியாது. எனது தந்தையின் கிரைய பத்திரத்தில் சொத்தை நாராயணி அம்மாளிக் பிதுராஜ்ஜிய சொத்து என்று குறிப்பிடப்பட்டுள்ளது ஆனால் மேற்படி சொத்தை அவர்

கிரையம் தான் வாங்கியிருந்தார் என்று சொன்னால் நாராயணி அம்மாள் எனது தந்தையின் அத்தை ஆவார்.

3. பி.வா.சா.ஆ1ல் குறிப்பிடப்பட்டிருந்த 112 எண்ணும் நாங்கள் உரிமை கோரும் எண் 92ம் வேறு வேறு என்று சொன்னால் அதைப் பற்றி எனக்கு தெரியாது. எனது தந்தை எழுதி வைத்த உயிலில் சொத்தின் எண் என்னவாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் எனக்கு ஞாபகமில்லை. சாட்சியிடம் பி.வா.சா.ஆ – 4 உயில் காண்பிக்கப்பட்டது. அதில் ஊத்துக்காடு கிராமம் என்று எழுதப்பட்டுள்ளது, கிராம எண் குறிப்பிடப்படவில்லை என்று சொன்னால் சொத்து விவரத்தில் சர்வே எண் குறிப்பிடப்பட்டுள்ளது, கிராம எண் குறிப்பிடப்படவில்லை. அதைப் பற்றி உயில் சாசனத்தின் விவரங்களிலும் குறிப்பிட்டு சொல்லப்பட்டுள்ளதா என்றால் இல்லை.

4. தாவா சொத்திற்கும் எனக்கும் எந்த சம்மந்தமும் இல்லை, ஆவணங்களை நாங்கள் தயாரித்துள்ளோம் என்று சொன்னால் சரியல்ல. தாவா சொத்தை ஆனந்தன் என்பவருக்கு 2008 குத்தகைக்கு கொடுத்திருந்தார் என்று குறிப்பிட்டு சொல்லியுள்ளேன் அந்த ஆவணத்தை தாக்கல் செய்துள்ளேன். சாட்சியிடம் பி.வா.சா.ஆ – 3 குத்தகை ஆவணம் காண்பிக்கப்பட்டது. அது 13.12.2013 தேதியிட்ட குத்தகை ஆவணம். ஆகவே 2008 நாங்கள் குத்தகை விட்டதாக சொல்வது பொய் என்று சொன்னால் சரியல்ல. நாங்கள் தாக்கல் செய்த பி.வா.சா.ஆ–3 ஆவணம் வழக்கிற்காக நாங்கள் தயார் செய்தது என்று சொன்னால் சரியல்ல. மேற்படி ஆவணத்தில் ஒரு வருடத்திற்கு மட்டும் தான் குத்தகைக்கு வழங்கப்பட்டது என்று சொன்னால் எனது தந்தை எனக்கு கொடுத்த விவரங்களை அவ்வாறே கொடுத்துவிட்டேன்.

5. எந்த தேதியில் காவல் நிலையத்தில் புகார் கொடுத்தோம் என்ற விவரம் ஞாபகமில்லை. 10.08.2013 அன்று புகார் கொடுத்தோம் என்று சொன்னால் 05.12.2013 அன்று தான் அந்த முதல் தகவல் அறிக்கை நீதிமன்றத்தில் தாக்கல்

செய்யப்பட்டு அவர்கள் கைது செய்யப்பட்டார்கள் என்று சொன்னால் அது பற்றி எனக்கு தெரியாது. மேற்படி குற்றவியல் வழக்கு நிலுவையில் உள்ளதாக தாவா எதிருரை மற்றும் பிரமாண வாக்குமூலத்திலும் குறிப்பிட்டு சொல்லியுள்ளேன் என்றால் எனக்கு தெரியாது.

6. பிரமாண வாக்குமூலம் மற்றும் எதிருரையில் குறிப்பாக வாதி எங்களது சொத்தில் தலையிட மாட்டார் என்று வாக்குமூலம் எழுதிகொடுத்ததாக தெரிவித்துள்ளேன் அதற்கான ஆவணத்தை தாக்கல் செய்துள்ளேன். நான் சொல்வது போல் எந்த ஆவணமும் தாக்கல் செய்யவில்லை என்று சொன்னால் சரியல்ல. எனது தந்தையின் பூர்வீகம் ஊத்துக்காடு கிராமம் நடுத்தெருவில் எங்கள் வீடு தற்போதும் உள்ளது. காவல் நிலையத்தில் அளித்த புகாரில் எனது தந்தை அப்போது தங்கியிருந்த முகவரி Dபிளாக் சட்டமன்ற உறுப்பினர் விடுதி, அண்ணாசாலை என்று குறிப்பிடப்பட்டுள்ளது அப்போது அங்கு தங்கியிருந்தோம். வட்டாட்சியரிடம் கொடுத்த புகாரில் ஊத்துக்காடு முகவரி குறிப்பிடப்பட்டுள்ளது. எங்களது அரசியல் செல்வாக்கை வைத்து வாதியை மிரட்டுவதற்காக சட்டமன்ற உறுப்பினர் விடுதி முகவரியை குறிப்பிட்டுள்ளோம் எங்களது உண்மையான முகவரியை மறைத்துள்ளோம் என்று சொன்னால் சரியல்ல.

**கற்றறிந்த வாதி தரப்பு வழக்கறிஞரின் வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணை தொடர்ச்சி ஒத்திவைக்கப்படுகிறது.**

(S/d.Fanny Rajan)
Principal District Munsif,
Kancheepuram.